# தமிழ் நாடு தகவல் ஆணையம்

காமதேனு கூட்டுறவு சிறப்பங்காடி முதல் தளம்,, புது எண் 378, அண்ணா சாலை,
தேனாம்பேட்டை சென்னை-600018. (தபால் பெட்டி எண் 6405 தேனாம்பேட்டை)
*தொலைபேசி எண் 24312841.*

**வழக்கு எண்.9759–A/விசாரணை/2009**

**<u>விசாரணை நடைபெற்ற நாள் 22.09.2009.</u>**

முன்னிலை: முனைவர் (திருமதி) சாரதா நம்பி ஆரூரன்,
எம்.ஏ.,எம்.ஃபில்,,பி.எச்,டி.,
மாநில தகவல் ஆணையர்

மனுதாரர்: திரு K.முத்தமிழ்ச்செல்வன்,
2/35, படையாச்சி தெரு,
வல்லம், தஞ்சாவூர் மாவட்டம் – 613 403.

பொது அதிகார அமைப்பு: பொதுத் தகவல் அலுவலர்,
முதன்மை செயலாளர் மற்றும் நில நிர்வாக
ஆணையர் அலுவலகம்,
சேப்பாக்கம், சென்னை – 600 005.

பொதுத் தகவல் அலுவலர்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
தஞ்சாவூர் மாவட்டம்.

*****

மனுதாரர் திரு K.முத்தமிழ்ச்செல்வன் மற்றும் பொதுத் தகவல் அலுவலர்கள் திரு A.சுந்தரமூர்த்தி, உதவி ஆணையர் (பொறுப்பு), முதன்மை செயலாளர் மற்றும் நில நிர்வாக ஆணையர் அலுவலகம், சேப்பாக்கம், சென்னை மற்றும் திரு த.தியாகராஜன், நேர்முக உதவியாளர் (பொது), மாவட்ட ஆட்சியர் அலுவவகம், தஞ்சாவூர் மாவட்டம் இன்று (22.09.2009) இவ்வாணையத்தில் நடைபெற்ற விசாரணைக்கு வந்திருந்தனர்.

மனுதாரர் 21.11.2008 அன்று புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டை வட்டம், குரும்பூண்டி கிராமத்தில் உள்ள புல எண்.39/6–க்கு UDR-க்கு முன்பான செட்டில்மெண்ட் 'அ' பதிவேட்டின் நகல் குறித்து 2 இனங்களில் தகவல்களைக் கேட்டிருக்கின்றார். தகவல் பெறாததால் 03.12.2008 அன்று துறைக்கு மேல் முறையீடும் 25.04.2009 அன்று

ஆணையத்திற்கு மேல் முறையீடும் செய்ததன் அடிப்படையில் வழக்கு இன்று **(22.09.2009)** விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

மனுதாரர் கேட்டுள்ள 'அ' பதிவேட்டின் நகல் புதுக்கோட்டை மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களில் எந்த அலுவலகத்தில் பராமரிக்கப்பட்டு வருகிறது என்பது குறித்த கேள்விக்குப் பொதுத் தகவல் அலுவலரிடம் விசாரித்த போது மேற்குறிப்பிட்ட பதிவேடு தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இல்லையென்று 04.11.2008 நாளிட்ட கடிதம் மூலம் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளதாகக் கூறினார். அதனை மனுதாரர் ஒப்புக்கொண்டார். புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலிருந்து இதே மனுவிற்கு எவ்வித தகவலும் பெறாததால் நில நிர்வாக ஆணையர் அவர்களுக்கு மனுச் செய்ததாக மனுதாரர் கூறினார். 01.06.2009 அன்று பொதுத் தகவல் அலுவலர், நில நிர்வாக ஆணையர் அலுவலகம் புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்குக் கடிதம் எழுதியுள்ளார். மனுதாரர் கேட்ட பதிவேடுகள் புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலக ஆவணக் காப்பறையில் இருப்பதாக 15.05.2009 நாளிட்ட தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும், எனவே இது தொடர்பாக மனுதாரர் புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தைத் தொடர்பு கொள்ளும்படியும் நில நிர்வாக ஆணையர் அலுவலகப் பொதுத் தகவல் அலுவலர் மனுதாரருக்குத் தெரிவித்துள்ளார்.

இது குறித்து தஞ்சாவூரில் ஏற்கெனவே ஆணையம் விசாரணை நடத்தியுள்ளது. மனுதாரர் கேட்ட 'அ' பதிவேட்டின் நகல் புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலகப் பொதுத் தகவல் அலுவலர் மூலம் வழங்கப்பட்டுள்ளது. மனுதாரர் கேட்ட தகவல் வழங்கப்பட்டுள்ளதால் வழக்கு இத்துடன் முடிவடைகின்றது.

**ஒப்புதல் பெறப்பட்ட நாள் 23.09.2009** **தமிழ்நாடு தகவல் ஆணையம்**
**ஆணையத்தின் ஆணைப்படி**

**(சு.மோகன தாஸ்)**
**உதவி பதிவாளர்**

பெறுநர்

**<u>வழக்கு எண்.9759–A/விசாரணை/2009</u>**

பொதுத் தகவல் அலுவலர்,
முதன்மை செயலாளர் மற்றும் நில நிர்வாக
ஆணையர் அலுவலகம்,
சேப்பாக்கம், சென்னை – 600 005.

பொதுத் தகவல் அலுவலர்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
தஞ்சாவூர் மாவட்டம்.

திரு K.முத்தமிழ்ச்செல்வன்,
2/35, படையாச்சி தெரு,
வல்லம்,
தஞ்சாவூர் மாவட்டம் – 613 403.

*"ptl"*